**S.C. No.56/2020**

**எதிரி ஆஜர்.**

**அ.சா.4 திரு. வள்ளிக்கண்ணன், த/பெ. நரசிம்மன்**

**தேதி-14.07.2025**

**அ.சா.4 இன்று மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது, நான் சென்று அண்ணா அண்ணா என்று கத்தி கதறினேன் என்று என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை நான் என்னுடைய போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர் குத்தி கீழே தள்ளியதில் என் அண்ணன் கீழே படுத்துக்கிடந்தார் என்ற விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் வடமாதிமங்கலம் அரசு ஆரம்ப சுகாதர நிலையத்திற்கும் செல்லவில்லை என்றாலும், என் அண்ணனின் பிரேதத்துடன் அரசு மருத்துவமனை ஆரணிக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுப்பதற்கு களம்பூர் காவல் நிலையத்திற்குச் சென்றேன் என்றால் காவலர்கள் வரச் சொன்னார்கள் அதனால் சென்றேன். களம்பூர் காவல் நிலையத்தில் நான் சொன்னதை எல்லாம் காவல் நிலையத்தில் எழுதிக் கொண்டு அதில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றாலும், அதை என்னிடம் படித்துக் காட்டினார்கள் என்றாலும் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்பது பற்றி எனக்கு ஞாபகமில்லை.

களம்பூர் காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். வடமாதிமங்கலம் மருத்துவமனையில் இருந்து என் வீடு எவ்வளவு தொலைவு என்றால் 3 கி.மீ. தொலைவு. நான் ஏற்கனவே சாட்சியம் அளித்த போது என் அண்ணனின்

பிரேதத்தை ஆரணியில் இருந்து வேலைக்காகாது என்பதால் வேலூருக்கு எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றும், வேலூரிலிருந்து வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள் என்றும் சொல்லியுள்ள விவரத்தை நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியிருப்பேன், ஞாபகமில்லை.

நான் குடியிருக்கும் எட்டிவாடி கிராமத்திலிருந்து என் அண்ணனின் நிலம் எவ்வளவு தொலைவு என்றால் 2 கி.மீ. தொலைவு. எனக்கு அங்கு எதுவும் நிலம் கிடையாது. நான் குத்தகைக்கு தான் பயிர் வைக்கும் வேலை செய்கிறேன். யாருடைய நிலத்தை நான் குத்தகைக்கு பயிர் வைக்கிறேன் என்றால் மலையாளத்துக்காரர் ராமசாமி என்பவரின் நிலம். வறட்டுக் குட்டைக்கும் என் அண்ணன் நிலத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் குட்டைக்கு மேற்கே முதலில் உள்ளது என் அண்ணனின் நிலம் தான்.

வறட்டுக் குட்டை கரை வழியாக எதிரியின் நிலத்திற்குச் செல்லலாம் என்றால் சரியல்ல, தற்போது தான் வழி போட்டார்கள், அதற்கு முன்பெல்லாம் என் அண்ணனின் நிலத்தின் வழியாக தான் செல்ல வேண்டும். நான் சொல்வது பொய் என்றாலும், வறட்டுக் குட்டை வழியாக எதிரியின் நிலத்திற்குச் செல்லலாம் என்றால் சரியல்ல. இறந்தவர் என் அண்ணன் என்பதால் இந்த வழக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>-** இல்லை.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.